பெண்கள் உலகை மிகவும் அழகாக்குகிறார்கள். அதைப் பாதுகாக்கிறார்கள், மேலும் உயிரோட்டத்துடன் வைத்திருக்கிறார்கள். திருத்தந்தை பிரான்சிஸ்.

— திருத்தந்தை பிரான்சிஸ்







**இன்றைய இறைவார்த்தை:**

திப: 3: 13-15, 17-19

திபா: 4: 2,4,7,9

1 யோ: 2:1-5

யோ: 24: 35-48

உயிர்த்தெழுதலுக்குப் பின் இயேசு தம் சீடர்களுக்கு இறைவாக்கினர்கள் முன்னறிவித்தது நிறைவேறியதைப் பற்றியும் பாஸ்கா மறையுண்மைகளைப் பற்றியும் சீடர்களுக்கு விளக்கிக் கூறுவதைப் பார்க்கிறோம். இந்த உலகத்தை கடவுளோடு மீண்டும் ஒப்புரவாக்குவதே தம் தந்தையின் திட்டம் என்பதை இயேசு அவர்களுக்குப் புரிய வைக்கிறார். அதற்குத் தரவேண்டிய விலை தான் தம்முடைய உயிர். நேர்மையான ஒருவரான இயேசுவே அதன் விலை, நீதியுள்ள அவர் நம் பாவங்களுக்காக மட்டுமல்ல, அனைத்துலகின் பாவங்களுக்காகவும் அதற்குப் பரிகாரமாக தம் உயிரைத் தந்தார் என்று புனித யோவான் கூறுகிறார்.

கிறிஸ்துவின் உயிர்த்தியாகத்தினால் அவர் காட்டிய அன்பு என்ற உணர்வோடு இது நிறைவடைகிறதா? இல்லை. இறைவாக்கினர்கள் முன்னறிவித்த அனைத்தும் நிறைவேறியதாக பேதுரு உறுதிப்படுத்துகிறார். மனம் திரும்புதலைப் போதிக்கின்றார். இன்றைய வாசகங்கள் அனைத்தும் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களின் தூதுரைப்பணியை முன்னெடுத்துச் செல்வதைப் பற்றி விவரிக்கிறது. மனம் திரும்புங்கள், நற்செய்தியை நம்புங்கள்; சாட்சிகளாகத் திகழுங்கள். இறைவனின் கட்டளைகளைக் கடைப்பிடித்து, அவரைப் போலவே அன்புசெய்தால் மட்டுமே நாம் நம்பிக்கையுள்ள சாட்சிகளாகத் திகழமுடியும்.

கிறிஸ்துவின் அமைதி நம் உள்ளங்களை ஊடுருவிச் செல்வதால், அவரை நாமும் பின்செல்ல புறப்படுவோம். நற்செய்தியை அறியாத பலர் இன்னும் உள்ளனர். **நம்வாழ்வின் மூலம், சொல், செயல்களின் மூலம் இயேசுவைப் பகிர்ந்துகொள்ளும் பொறுப்புணர்வு நமக்குள்ளது.** இயேசு விவிலியத்தை நமக்கு விளக்கிக்கூறும்போது, அந்த வார்த்தைகளை நாம் சுவைத்து நமது குடும்பங்களில், அதிச க்கள், சமூகம் மற்றும் பிறரோடுப் பகிர்ந்துகொள்வோம். உணவில்லாதவர்களோடு உணவைப் பகிர்ந்துகொள்ளும்போதும், முகத்தில் புன்னகையோடு அவர்களை எதிர்கொள்ளும்போதும், கிறிஸ்துவின் அன்பைக் கொண்டு வருகிறோம். முதியோரின் காதுகளில் இயேசு அவர்களை அன்பு செய்கிறார் என்று கிசுகிசுக்க நாம் அவர்களை நோக்கிக் குனியும்போது. அவர்களுக்காக நாம் இருக்கிறோமென்ற உணர்வைத் தருகிறோம். குடும்பத்திலுள்ள பிள்ளைகள் வழிதவறிச்செல்லும்போது, நம்முடைய இறைவேண்டல்களால் அவர்களை இறைவனிடம் உயர்த்துவோம். குறிப்பிட்ட நேரத்தில் அவர் அதை செய்துமுடிப்பார்.

எப்பொழுதும் எல்லா நேரங்களில் அவருடைய ஒளி நம்மீது ஒளிரட்டும். இதனால் கிறிஸ்துவின் ஒளி அனைவரும் விரும்புவதுபோல எல்லா இடங்களிலும் பிரதிபலிக்கட்டும். “உங்களுக்கு அமைதி உரித்தாகுக!

INTERNAL CIRCULATION ONLY
BUL 15/2024

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org

14 ஏப்ரல் 2024
ஈஸ்டர் காலத்தின் 3 ஆம் ஞாயிறு

NEW WAY OF BEING CHURCH

newbec

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)

மாதாந்திர கருப்பொருள்

திருஅவையாக பெண்களின் மதிப்பையும் மாண்பையும் கொண்டாடுதல்

# அமைதி உரித்தாகுக!

விவிலியத்தில் இயேசு நம்மை வாழ்த்துகிறார். அவருடைய வார்த்தையில் நாம் நிறைந்திருக்கவும், நம் உள்ளங்களைத் திறக்கவும் விரும்புகிறார். பாஸ்கா காலத்தின் மூன்றாம் ஞாயிறில் இணைந்திருக்கும் நம் ஒவ்வொருவரின் உள்ளங்களையும் தூய ஆவியானவர் ஒளியூட்டும்படி மன்றாடுவோம்.

